**லங்கா பொஸ்பேற் லிமிடெட் - 2023**

-----------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

லங்கா பொஸ்பேற் லிமிடெட்டின் (''கம்பனியின்'') 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்களையும் உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரைக்கும் இயந்திரங்களுக்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 15,816,482 ஆன பெறுமதிக்கு இறக்குமதி செய்யப்பட்ட ரப்பர் புஷ் ஆண்டிலேயே கிடைத்த போதும் சாதாரண இருப்பு கணக்கிற்கு வர வைக்காமல் முற்பண கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன்.<br>உதிரி பாகங்கள் இருப்பு 2022/23 ஆம் கணக்காண்டில் நிறுவனத்திற்கு கிடைத்திருந்த போதும் இந்த 200 ரபர் புஷ் தொடர்பாக பரிசோதனை ஒன்று செயல்படுத்தாமை காரணமாக GRN பத்திரங்களை வழங்கி கணக்கீட்டு முறைமைக்கு உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. 2024 ஆகஸ்ட் மாதம் அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் அதில் இதற்காக GRN வழங்கி எதிர்வரும் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.'. அதன் பிரகாரம் அக்கூட்ட அறிக்கை கிடைத்த பின்னர் பொருத்தமான பிரகாரம் GRN வழங்கி இக்கிரளத்தை சாதாரண இருப்புக்கு மாற்றுவதற்கு 2024/2025 கணக்கு ஆண்டில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | இருப்புக்களை களஞ்சிய பதிவேடுகளில் உள்ளடக்கி செலவினம் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அரைக்கும் இயந்திரத்தை நிறுவுவதற்கு தேவையான அத்திவாரத்தை அமைப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 3,450,000 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காலாவதியான இருப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2014 ஆம் ஆண்டின் போது மேற் கொள்ளப்பட்ட தாபன நடவடிக்கை களுக்காக முன்பண தொகையாக ரூபா 7.44 மில்லியன் தொகை இயந்திரத்திற்கு தேவை என உள்நாட்டில் வழங்கப்பட்ட இயந்திர பகுதிகளுக்காகவும் நிலத்தை அமைப்பது மற்றும் கொங்கிரீட் உட்பட ஏனைய நடைமுறை வேலைகளுக்காக செலவிடப்பட்டுள்ளன. 2022 இல் மீண்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் போது மேற்படி முற்பணத்தொகை கீழ் வழங்கப்பட்டிருந்த உருப்படிகளில் ரூபா 3.99 மில்லியன் பெறுமதியான இயந்திர பகுதிகள் அதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் எஞ்சிய தொகையான ரூபா 3.45 மில்லியன் பெறுமதியான நிலத்துக்கு கொங்கிரேட் இடுதல் மற்றும் ஏனைய நடைமுறை வேலைகள் தொடர்பாக செயல்படப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது இந்த இயந்திரத்தைமீண்டும் நிறுவும் போது திட்டமிடப்பட்ட இடத்திற்கு புறம்பாக மீண்டும் கொங்கிரீட் இடப்பட்டு நிறுவப்பட்டதால் மேற்படி செலவிடப்பட்ட ரூபா 3.45 மில்லியன் | செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொகை 2022 ஆம் ஆண்டில் நிருவப்பட்ட இயந்திரத்திற்குரியதாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து எடுக்கப்பட்டிருக்கவில்லை இது தொடர்பான விடயங்கள் திட்டவட்டமாக இனங் காண்பதற்காக மற்றும் இது தொடர்பான முறையான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் முறையான குழு ஒன்றை இதுவரை தற்போது நியமிக்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக எதிர்பார்த்து உள்ளோம் | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 39,571,405 ஆன கடன்பட்டோர் மீதியில் அறவிட முடியாக் கடனுக்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐந்து வருடங்களுக்கு மேல் அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,701,486 ஆக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். 15 ஆண்டுகள் அளவில் பழைய மீதிகள் ஆகும். ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபாய் 9,770,006 பெறுமதியில் ரூபா 409,483 தொகை ஆண்டில் அளவிடப்பட்டுள்ளது. அரசு நிறுவனங்களுக்குரிய காணப்பட்ட மீதிகளில் ரூபா 2,666,038 ஆன மீதியொன்று கைத்தொழில் அமைச்சு மற்றும் நிதி அமைச்சர் அங்கீகாரத்தின் பிரகாரம் முழுமையாக பதிவழிக்கப்பட்டது அதன் பிரகாரம் மேலும் 6.6 மில்லியனுக்கு அண்மித்த மீதியொன்று தீர்வு செய்வதற்கு உள்ளது. இது தொடர்பாக பணிப்பாளர் சபை வரிசை அமைச்சு மற்றும் நிதி அமைச்சுடன் கலந்துரையாடி துரித நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளது | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 35,867,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கிறசர் இயந்திரம் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் கம்பனியின் வளவில் விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய நிறுத்தி வைத்தல் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். இந்த இயந்திரத்தை நிறுவும் இறுதி கட்டத்தின் போது கொடுப்பனவு தொடர்பாக உருவான சிக்கலை அடிப்படையாகக் கொண்டு உரிய வழங்குநர் கம்பெனி ஊடாக அத்தவறை திருத்தம் செய்வதற்கு நிறுவனத்துக்கு முடியாமல் போனது. அதனால் | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 4,386,358 தொகையும் தீர்த்து வைக்காமல் 2014 ஆம் ஆண்டு முதல் அட்டுறு செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரர் கொடுப்பனவிறகு உள்ள ரூபா 4.3 மில்லியன் தொகை நிறுத்தி வைக்கப்பட்டது, மேலும் இந்த தொகையை கேள்விதாரருக்கு விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்படாதிருந்ததுடன் இத்தொகையை செலவிட்டு இயந்திரத்தை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பணிப்பாளர்சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் சட்டப்பிரிவிடமிருந்து தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகளுக்காக தடையொன்று இல்லாத வகையில் பெறுகை முறை பின்பற்றப்பட்டு இவ்வியந்திரத்தை மீண்டும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக சேர்ப்பதற்கு தேவையான மீள் புனரமைப்பு நடவடிக்கைகள் (Reassembling) இச்சந்தர்ப்பம் வரையிலும் நிறுவனத்தின் பொறியியலாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 239,414,825 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 44,036,939 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 185,377,886 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கம்பனியின் வருமானம் ரூபா 533,938,717 ஆல் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 21,226,633 மூலதன செலவினத்தில் ஆரம்பிக்கப்பட்ட வாரியபொல தென்னை உர செயற்திட்டத்தின் உற்பத்தி செயற்பாடுகள் 2021 மே 05 ஆம் திகதி வரையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மொத்த செயற்திட்டத்தின் மூலம் ரூபா 31.71 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டப் பணிகளுக்காக ஐந்து வருட வாடகை பெறப்பட்ட காணியின் வாடகை கால எல்லை 2018 செப்டெம்பர் 05 ஆம் | இணங்குகிறேன்.<br><br>போட்டி ரீதியில் சந்தையில் வேறுபாடு இடம் பெறாது எதிர்பார்க்கப்பட்ட ஒரு கலவை கட்டளை பெற்றுக் கொள்ள முடியாமல் செயற்திட்ட ஊழியர்களை ஆட்சேர்ப்பின் ஊடாக ஊழியக்கிரயம் அதிகரித்தல் அலகு உற்பத்தி கிரயத்தின் ஊடாக மொத்த கிரயம் அதிகரித்தல், தென்னை உர கலவைக்காக அரசினால் கட்டுப்பாட்டு விளைவுகளை தீர்மானித்துள்ளதால் எமது கிரயத்தை அடிப்படையாக விலை தீர்மானிப்பதற்கு எமக்கு | காணியின் குத்தகை கால சிக்கல்களை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | திகதியில் முடிவடைந்திருந்ததுடன் வாடகை உடன்படிக்கை புதுப்பிக்காமல் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2022 செப்டெம்பர் மாதம் முதல் கம்பனிக்கு செயற்திட்ட நிலத்தில் உள்செல்வதற்கு காணியின் உரித்தான தரப்பினரால் தடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடியாதிருந்தது சந்தையில் தேவையின் பிரகாரம் Urea, MOP போன்ற ஏனைய மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் முகாமைக்கு தீர்மானம் மற்றும் தொழிற்சங்கங்களின் வேண்டுகோள் விற்பனையை மேம்படுத்துவதற்கு தடையாக காணப்பட்டன. 2020 திசெம்பர் மாதம் முகாமையினால் அறிமுகப்படுத்தப் பட்ட புதிய முறைகளின் கீழ் உற்பத்தி மற்றும் விற்பனை வருமானம் அதிகரித்து நட்டம் பாதி அளவில் குறைவடைந்து இருந்த போதும் 2021 ஏப்ரல் மாதம் முதல் இரசாயன பசளை தொடர்பாக அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் பாதிப்படைந்தன இக்கட்டிடம் தொடர்பாக காணி உரிமையாளரின் இக்கட்டிடம் கையேற்கும் அதற்கு முயற்சி சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக சட்ட நடைமுறைகளை எடுப்பதற்கு எம்மால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணி உரிமையாளருக்கு குத்தகை வாடகையாக 2021 ஜுன் முதல் 2022 செப்டம்பர் வரை செலுத்த வேண்டிய ரூபா 480,000 தொகை எமது நிறுவனத்தினால் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கம்பெனியால் CIC கம்பெனிக்கு விற்பனை செய்யப்பட்ட 393 மெற்றி தொன் ERP பசளையில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட ரொக் பொஸ்பேஸ்ட் சதவீதம் இல்லாமை காரணமாக அந்த இருப்பு தொகை மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதற்காக போக்குவரத்து செய்யப்பட்ட போக்குவரத்து செலவுதான் மற்றும் ஏற்றல் கூலி செலவினமாக ரூபா 1,739,381 ஆன விளைவற்ற செலவினம் ஒன்று மீளாய் வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. அந்த ERP இருப்பு அதிமேற் தர எப்பாவல ரோக் பொஸ்பேட் உடன் கலந்து மீண்டும் தயாரித்தல் 2023 ஜுலை 23 முதல் 2023 ஆகஸ்ட் 07 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் | உங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2022 உற்பத்தி செய்யப்பட்ட ரோக் பொஸ்பேட்டில் நிர்ணயிக்கப்பட்ட தரம் இல்லாமை தொடர்பாக ஆரம்ப பரிசோதனை என்று மேற்கொள்ளப்பட்டு சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது அப்போது இருந்த உதவி தரக்கட்டுப்பாட்டு உத்தியோதரும் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்டுள்ளார். குறுங்காலத்தில் அதிக கிராம் ஒன்றை செலவிடுவதற்கு நேர்ந்த போதும் நிறுவனத்தின் நீண்ட கால நோக்கங்கள, நிலைத்திரு இருப்பு மற்றும் விற்பனை திட்டங்கள் என்பவற்றை கருத்திற் கொண்டு முகாமைத்துவ நடவடிக்கை எடுக்கப்பட்டு பொஸ்பேட் வழங்கும் தனியுரிமை நிறுவனம் ஒன்றாக | உரிய உற்பத்தி தரத்தை பேணி செல்ல வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் விற்பனை செய்யப்பட்டு இருக்கவில்லை | இலங்கை பொஸ்பேட் கம்பெனி அதன் நன்மதிப்பை தக்க வைத்துக் கொள்வதற்கும் கவனியீனம் காரணமாக இச்சிக்கல் உருவாகியிருந்தால் அந்த உத்தியோகத்தர்கள் இடமிருந்து இந்நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (இ) | சுற்றாடல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2012 ஏப்ரல் 20 ஆம் திகதிய 16/2022 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் கனியவளங்கள் ஆரம்பத்தன்மைக்கான ஏற்றுமதி செய்தலை அதைரியப்படுத்துவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் எவ்வித பெறுமதி சேர்த்தலொன்று இல்லாமல் பொஸ்பேட் கணிப்பொருளை ஏற்றுமதி செய்வதற்காக மூன்று கொள்வனவாளர்களுக்கு உள்நாட்டு விலை அடிப்படையில் விற்பனை செய்வதற்கு கம்பெனி நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த கொள்வனவாளர்களுக்கு பொஸ்பேட் விற்பனையின் போது முறையான நடைமுறை ஒன்று பின்பற்றப்படாத இருந்தமை கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.<br>மீளாய்வாண்டில் கம்பெனி மூன்று வழங்குனருக்கு 13,207 மெட்ரிக் தொன் பொஸ்பேட் அளவொன்று உள்நாட்டு விலை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டு ரூபா 343,382,000 (1 மெட்ரிக் தொன் ரூபா 26,000 வீதம்) ஆன வருமானம் ஒன்று ஈட்டப்பட்டு இருந்தது. | 2023 ஜூலை மாதத்தின் போது ஏற்றுமதிக்காக தீர்மானிக்கப்படும் அனைத்து நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னர் பொஸ்பேட் தொடர்பாக அந்த அமைச்சரவை தீர்மானம் செல்லுபடியானதா என தெரிவிக்கப்பட்டோ அல்லது ஆலோசனை ஒன்றோ கிடைக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் ஆரம்பமாகும் வரை உள்நாட்டு சந்தைக்கு மாத்திரம் வழங்கும் வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கு வழக்கு தீர்ப்பு மற்றும் சட்ட வரையறை காரணமாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியை அறிமுகப்படுத்துவதற்கு 2005 ஆம் ஆண்டு முதல் முயற்சி செய்த போதும் அது வெற்றி அளிக்கவில்லை. 50,000 மெற்றிக தொன் அளவினை 30,000 மெற்றிக் தொன் வரை குறைந்தமை நிறுவனத்தின் நிதிசார் நிலைமை மற்றும் தொடர்ச்சியான நிலை திருத்தன்மைக்கு சவாலாக காணப்பட்டது. 2023 ஜூலை 27 ஆம் திகதி கௌரவ அமைச்சர் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைமுறை ஒன்றை தயாரிக்கும் வரை ஆரம்ப படிமுறையாக 30,000 மெற்றிக் தொன் அபடைட் அளவென்றுக்கு வேண்டுகோள் செய்யப்பட்டிருந்த மூன்று வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டதுடன் அதற்காக 2023 ஜூலை மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற 340 வது பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டது. | உற்பத்திக்கு பெறுமதி சேர்க்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | :இயந்திர கூடத்திற்காக தேவைப்படுகின்ற உதிரி பாகங்களின் தேவைப்பாட்டை மதிப்பீடு செய்யாமல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,975,998 பெறுமதியான உதிரிப் பாகங்கள் | இந்த Bull Rings தற்போது நிறுவனத்தின் பயன்பாட்டில் இல்லாத 03 Roller Mill இயந்திரங்களுக்காக கொண்டு வரப்பட்ட போதும் 2014 ஆம் ஆண்டு முதல் இவ்வியந்திரங்கள் பயன்படுத்தப்படவில்லை. TGM 160 | தேவைப்பாட்டை மிகைத்த கொள்வனவின் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| கம்பெனி களஞ்சியத்தில் வருடக் கணக்காக பயன்பாட்டிற்கு எடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | Mil-02 இயந்திரங்களிற்காக குறிப்பாக கொண்டு வரப்பட்ட போதும் 2012 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்த TGM 160 Mil 01 இன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது புதிய மில் இயந்திரத்திற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதும் புதிய மில் இயந்தித்தை நிறுவும் போது மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப மாற்றத்தின் பேரில் இந்த உருப்படியை பயன்படுத்த முடியாததாக இருந்தது. எவ்வாறாயினும் இந்த உருப்படிகள் காணப்படும் மின் இயந்திரப் பராமரிப்பிற்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக இயந்திரப் பொறியியலாளர் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br>மேலும் தற்போது பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத 03 உதிரிபாகங்களை முறைப்படி அகற்றுவது வெற்றி அளிக்கவில்லை. அவ்வாறு IDB நிறுவனத்தின் ஊடாக இந்த உருப்படிகளுக்காக வாடிக்கையாளர்களை தேடிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அது வெற்றி அளிக்கவில்லை. எதிர்காலத்தில் இது தொடர்பாக அரசு நிறுவனம் ஒன்றுடன் கலந்துரையாடி விரைவில் தீர்வு ஒன்றே பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடகணக்காக இருந்து வெளியேற்றப்பட்ட உடைந்த இரும்புகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட இயந்திர பகுதிகள் எப்பாவல தொழிற்சாலை வளவில் பாதுகாப்பற்ற வகையில் வைக்கப்பட்டிருந்ததுடன் பொருட்களை முறைப்படி கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றப்பட்ட இரும்புகள் மற்றும் இயந்திர பகுதிகளை முறைப்படி வெளியேற்றுவதற்கு தற்போது இடங்கள் இனங் காணப்பட்டு இருந்ததுடன் கேள்வி கோருவதற்கு போதிய அளவு உடைந்த பொருட்கள் சேர்ந்தவுடன் அவற்றை முறைப்படி கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட இயந்திர பகுதிகளை முறையாக கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டும் |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் கனிப்பொருள் அரைக்கும் இயந்திரத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற இறப்பர் புஸ் அலகொன்று ரூபா 350 வீதம் உள்நாட்டு கம்பனியிலிருந்து கொள்வனவு செய்து கணக்காய்வுத் திகதியான 2024 ஏப்ரல் 01 வரையும் இயந்திரத்திற்காக பயன்படுத்தப் பட்டிருந்தது. உரிய பொருட்களில் 81 அலகுகள் களஞ்சியத்தில் காணப்படும் போது இருப்பு பூச்சியமாக இருந்ததாக காண்பித்து 2022 திசெம்பர் 17 ஆம் திகதி அலகொன்று ரூபா 79,082 வீதம் 200 இறப்பர் புஷ் அலகுகள் ரூபா 15,816,482 தொகையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 70,000 (ரூபா 350x200) ஆன ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படக் கூடியதாக இருந்த ருப்புக்கள் மிகவும் உயர்ந்த பெறுமதியில் இறக்குமதி செய்ததன் மூலம் ரூபா 15,746,482 ஆன நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. கொள்வனவு செய்த இந்த இருப்பு கணக்காய்வுத் திகதியான 2024 ஏப்ரல் 01 வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யும் போது அந்த இறப்பர் புஸ்களின் மேலதிக (Coupling bolt) அலகுகள் 198 ஆகவும் அதனுடன் கிடைத்திருந்த போதிலும் அந்தக் கட்டளையால் உரிய இயந்திரத்திற்கு எந்தவொரு பயன்பாடும் இல்லாதிருந்தமையால் அது விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன. | உங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன்.<br><br>கொள்வனவு செய்தல் தொடர்பாக தற்போது அமைச்சு மட்டத்தில் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படுவதுடன் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினாலும், பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே உயர் நீதிமன்றத்தில் காணப்படுகின்ற வழக்கிற்குரிய வழக்கினால் இந்த பிரச்சினைகள் காணப்படுவதால இது தொடர்பில் இச்சந்தர்ப்பத்தில் கபருத்து தெரிவிக்க முடியாதுள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்யக்கூடிய சகல இயந்திர பாகங்களும் மற்றும் உதிரிப்பாகங்களும் நாட்டில் உற்பத்தி செய்து கொள்வனவு செய்வதற்கும் அவ்வாறே வெளிநாடு களிலிருந்து கட்டாயமாக இறக்குமதி செய்யப்பட வேண்டிய மேலதிக உதிரிப்பாகங்கள் சர்வதேச பெறுகை முறையின் ஊடாக மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | வெற்றியளிக்காத கொள்வனவுகளுக்காக மேற்கொள்ளாமல் பொறுப்புவாய்ந்தவர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். இருப்பினைப் பயன்பாட்டிற்கு / எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பெனியில் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்களான செயற்பாட்டு முகாமையாளர், வழங்கல் உத்தியோகத்தர் 2023 ஜுலை 18 ஆம் திகதியில் இருந்தும் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுனர் ஜனவரி 12 ஆம் திகதியில் இருந்தும் இரண்டாம் மட்டத்தின் தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் 2023 ஏப்ரல் 26 ஆம் திகதியில் இருந்தும் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுவதற்கு தவிர ஏனைய மூன்று உத்தியோகத்தர்களும் வேலை இடைநிறுத்தத்துக்கு உட்பட்ட தினத்தில் இருந்து அரைச் சம்பளத்தை வழங்குவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. கணக்காய்வு திகதி வரையிலும் உரிய பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத நிலைமையில் மேற்கூறிய மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 901,805 ஆன அரைச் சம்பளம் கம்பனியால் மீளாயாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செயற்பாட்டு முகாமையாளர் மற்றும் வழங்கள் உத்தியோகத்தரினால் உயர் நீதிமன்றத்தில் உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பாக 02 வழக்குகளை தொடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றது. எனினும் உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்டுள்ள காலத்தில் அரைச் சம்பளத்தை வழங்குவதற்கு ஏதுவான இயலுமை விசாரித்ததன் பின்னர் அதற்காக 342 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் அரைச்சம்பளம் கொடுப்பனவு இடம்பெற்றுள்ளது. | உரிய பரிசோதனைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 67.8 மில்லியனான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அதனூடாக சுற்றாடலுக்கு இசைவான மற்றும் நவீன செயற்பாடுகள் ஊடாக பொசுபேற்று உரத்திற்கான தேசிய தேவையினை பூர்த்தி செய்தல் அல்லது காணப்படும் கணக்கீட்டு முறைமையை மெம்படுத்துவதற்கு ரூபா 7.2 நிதி ஏற்பாட்டின் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி ஒன்றாக Single Super Phosphate உற்பத்தி செய்வதற்கு நடைமுறை வெற்றியளிக்காததன் பேரில் நிறுவனத்தின் நிலைத்திருத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஏதேனும் ரோக் பொஸ்பேட் அளவொன்றை ஏற்றுமதி செய்வது இடம்பெற்று இருந்தது. மேலும் பாரியளவில் முறையான நடைமுறை ஒன்று ஊடாக TSP/SSP உற்பத்தி இல்லாமை காரணமாக இச்சந்தர்ப்பம் வரையில் தனியார் மட்டத்தில் நாட்டில் SSP உற்பத்தி செய்வதற்கு சில முயற்சியாளர்கள் முன்வந்திருப்பது அறியக்கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக லங்கெம் நிறுவனத்தினால் அனுராதபுர பிரதேசத்தில் SSP தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டில் ஏற்றுமதி சந்தையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்திகள் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு உத்தியோகத்தர்களின் கூடிய ஈடுபாடு மற்றும் காலமொன்று எடுக்கப்படுவதால் இதற்காக வழங்கப்பட்ட முன்னுரிமை குறைவடைந்திருந்ததுடன் எதிர்காலத்தில் அதற்காக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்பணிக்குரிய இணங்கியதாக செயற்பாடுக்ள திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |